## மெட்ரோ ரயில் நிலையங்களில்

# வாக்குப்பதிவு விழிப்புணர்வு

சென்னை, ஏப். 12: பொதுத் தேர்தலை முன்னிட்டு, மெட்ரோ ரயில் நிலையங்களில் வாக்குப்பதிவு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழகம் உள்பட 13 மாநிலங்களில் ஏப்ரல் 18ம் தேதி பொதுத்தேர்தல் நடக்கிறது. மெட்ரோ ரயிலில் பயணம் செய்யும் பொதுமக்களிடையே வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியை தொடங்கியுள்ளது. அதன்படி தேர்தல் கமிஷன் உருவாக்கியுள்ள 11 வீடியோக்கள், 32 போஸ்டர்கள் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் சமூக வலைதள பக்கங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மெட்ரோ ரயில் நிலையங்கள், மெட்ரோ ரயிலுக்கு உள்ளேயும் ஒட்டப்பட்டுள்ளது. பிரபலங்கள் பலர் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும், 1950 என்ற எண்ணுக்கு தங்கள் முகவரிக்கு அருகாமையில் உள்ள, வாக்குப்பதிவு மையம் எது என தெரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

இந்த வீடியோக்கள், போஸ்டர்கள் பெரும் எண்ணிக்கையில் சமூகவலைதளங்களில் பகிரப்பட்டுள்ளது. இதேபோல், மேலும் 14 வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்பட உள்ளது. இதன்மூலம் அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் வாக்களிக்க ஏப்ரல் 11ம் தேதி முதல் மே 19ம் தேதி வரை விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.